# கோலாலம்பூர் டத்தோ பண்டாருடன்

# துணைப்பிரதமர் சந்திப்பு



**கோலாலம்பூர், அக். 3-**

**தலைநகரில் நிலவிவரும் போக்குவரத்து நெரிசல் உட்பட அதன் மேம்பாடு, பசுமைத் திட்டத்தை உறுதிப்படுத்த தாம் முக்கியக் கவனம் செலுத்தப்போவதாக துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அமாட் ஸாஹிட் ஹமிடி கூறினார்.**

வரும் 2026ஆம் ஆண்டு மலேசியாவுக்கு வருகை புரியும் ஆண்டாக அறிவிக்கப்படும் வேளையில் 2025ஆம் ஆண்டில் ஆசியான் கூட்டத்திற்கு மலேசியாவைத் தயார்ப்படுத்தும் வகையில் மேற்குறிப்பிட்ட இவற்றின் மீது அரசாங்கம் அதிகக் கவனம் செலுத்தும் என அவர் தமது ஃபேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அவர் கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப்பைச் சந்தித்துப் பேசினார். அவருடன் பல்வேறு விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக வட்டார, புறநகர் மேம்பாட்டுத்துறை அமைச்சருமான அவர் கூறினார்.

கோலாலம்பூர் வாழ் மக்களுக்காக பல்வேறு அடிப்படை வசதிகளையும் மேம்பாட்டுத் திட்டங்களையும் கொண்டு வரவிருக்கும் மத்திய அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்து அவரிடம் பேசப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

மத்திய அரசாங்கத்திற்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இடையிலான உறவு மிக முக்கியமாகும். அங்கு மேற்கொள்ளப்படும் அனைத்து மேம்பாட்டுத் திட்டங்களும் சீரான முறையில் செயல்படுவதற்கு இந்த உறவு மிகவும் முக்கியம் எனவும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவுக்கான இலங்கைத் தூதர் ஃபட்லி ஹிஷாம் அடாமை தமது அலுவலகத்தில் சந்தித்துப் பேசியதையும் துணைப்பிரதமர் அதில் குறிப்பிட்டிருந்தார். இச்சந்திப்பின்போது மலேசியா - இலங்கை இருவழி உறவுகள் உட்பட பல்வேறு ஒத்துழைப்பு வாய்ப்புகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாட்டு மக்களும் பயனடையும் வகையில் இவ்விரு நாடுகளும் தங்களின் ஒத்துழைப்பையும் நல்லுறவையும் மேலும் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும் எனத் தாம் அவரைக் கேட்டுக் கொள்வதாகவும் துணைப்பிரதமர் கூறினார்.